[9th November 1965

திரு. டி. கார்ச்சா கவுடர் : சென்னை நகரத்தில் ஜனத்தொகை 20 லட்சம் என்று சொல்லப்பட்டது. குடும்பக் கார்டு திட்டம் வந்த பிறகு 40 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்பது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருக்கு புள்ளி விவரம் சரியாகக் கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திருமதி டி. என். அனந்தநாயகி : நியாயவிலைக் கடைகளில் புதிய மீன்களையும் நியாயமான விலைக்குக் கிடைக்க வழி செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : நியாயவிலைக் கடைகளில் வைத்துத்தான் கொடுக்கவேண்டுமென்பதில்லை. நியாயமான விலைக்குக் கொடுக்க மீன் இலாகா நடவடிக்கை எடுத்துக் கொள்கிறது.

திரு. க. ர. நல்லசிவம் : கிராமப்புறங்களிலேயே நெல் விளைவிக்க கூடிய தொழிலாளர்களோடு நெசவாளர்கள் போன்றவர்களும் வசிக்கிறார்கள். இவர்களுக்கு நெல் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் அல்லாத தொழிலாளர்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : எங்கெங்கே கஷ்டம் இருந்தாலும் அதை உடனடியாக அந்த அந்த ஜில்லாக் கலெக்டரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் குடும்பக் கார்டு முறையில் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

MR. SPEAKER : I hope the House agrees to extend the time for Question Hour.

உணவு தானியங்கள் பதுக்கல் முதலிய குற்றங்கள்

* 379 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :
திரு. ஆ. கு. சுப்பையா : } கனம் உணவு அமைச்சர்

தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தமிழக அரசாங்கம் நிர்ணயம் செய்த விலைக்கு மேல் அரிசியை விற்பனை செய்த காரணத்திற்காக இதுவரை பிடிக்கப் பட்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) One hundred and eighty-nine persons were arrested for selling rice at rates higher than the maximum prices fixed by the Government.

(b) Of these one hundred and eighty-nine persons; one hundred and eighteen persons were convicted, thirty-six were acquitted and the case against one was dropped. Cases against three persons are pending trial in courts and cases against twenty-four persons are still under investigation. Action against seven persons was dropped.

9th November 1965]

திரு. எஸ். முருகையன் : இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் விஷயத்தில் சர்க்கார் யாருக்காவது தலையிட்டு அவர் மீது வழக்கு போடக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : என்னிடத்தில் விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒரு வழக்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை என்று சொன்னார்கள். எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : என்னிடத்தில் அந்த விவரம் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன் : கிருஷ்ணகிரி மாவட்டம் கேரளா, மைசூர் ராஜ்ய எல்லையை ஒட்டி இருக்கிறது. செக் போஸ்ட் ஓசூரில் மட்டும் தான் இருக்கிறது. வேபனபள்ளி, காட்டுப்பாக்கம் வழியாக ஆயிரக்கணக்கான மூட்டைகள் அரிசி, ராகி போன்றவை கள்ளத்தனமாக கடத்தப்படுகிறது என்று புகார் செய்ய, அதைத்தடுக்க ஆர்ம்டு ரிசர்வ் போலீஸ் வேண்டும் என்று ஜில்லாக் கலெக்டர் கேட்டும் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : இதுபோன்ற கோரிக்கை வந்ததாக நினைவு இல்லை. வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

* 380 கேள்வி.—**திரு. இராம. அரங்கண்ணல்** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை நகரில் 1964 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் உணவுப் பொருள்களைப் பதுக்கிவைத்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட மொத்த வியாபாரிகள், சில்லரை வியாபாரிகள் எத்தனை பேர் ?

(இ) சென்னை நகரில் 1964 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் நிர்ணய விலைக்கு மேல் விற்றதற்காகக் கைது செய்யப்பட்ட மொத்த வியாபாரிகள் எத்தனை பேர்; சில்லரை வியாபாரிகள் எத்தனை பேர் ?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) Five retailers were arrested in Madras City for hoarding of foodgrains and twenty-five retailers were arrested in Madras City for selling foodstuffs at prices higher than the maximum controlled rates during the months of September and October 1964. No wholesaler was arrested for hoarding foodgrains or for selling foodstuffs at price higher than the maximum controlled rates in Madras City during that period.